Alcohol and Drug
Information Centre

ADIC

No.40/18, Park Road, Colombo 05, Sri Lanka.
Tel: +94 11 2584416,+94 11 2592515, Fax: +94 112508484
Email: info@adicsrilanka.org
Web site: http//www.adicsrilanka.org

ஊடகச் செய்தி
07.01.2026

**இலங்கையின் புகையிலை கட்டுப்பாட்டு முயற்சிகளில் புகையிலைத் துறையின் தலையீடுகள் ஏற்படுத்தும் தாக்கம் : சர்வதேச மற்றும் இலங்கை புகையிலைத் துறை தலையீடுகளின் (TII) குறியீடு வெளியீடு**

இலங்கை நீண்டகாலமாக புகையிலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தாலும் பொது சுகாதாரத்திற்கான பாரிய அச்சுறுத்தலாக புகையிலை பாவனை இன்னமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சுமார் 15 இலட்சம் பேர் (பெரியவர்கள்) புகைத்தலில் ஈடுபடுகின்றனர். எமது நாட்டில் தினமும் புகைபிடிப்பவர்கள் 50 பேர் அகால மரணத்தை தழுவுகின்றமைக் குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கையில் 83வீதமான இறப்புக்கள் தொற்றா நோய்களினாலேயே ஏற்படுகின்றன. புகையிலை பாவனையானது தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கும் நான்கு காரணங்களின் முதன்மை காரணமாக விளங்குகின்றது. இந்நிலைமை நாட்டின் பொது சுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நிலைமையாகும். இலங்கையர்கள் தினமும் ரூபா. 520 மில்லியன்களை சிகரட் புகைப்பதற்காக செலவிடுகின்றனர், இது தனி மனிதனின், குடும்பத்தின், ஒரு சமூகத்தின் பொருளாதார சரிவிற்கு காரணமாகவும் அமைகின்றது. இந்த சவால்களை இலக்கு வைத்து, தமது நிறுவனத்தின் இலாபத்தை நிலைநாட்டுவதற்கும், சரிந்து வரும் வாடிக்கையாளர்களை மீள் நிரப்பி, தக்க வைத்துக்கொள்வதற்கும் இளைஞர்கள், சிறுவர்கள், புகைத்தல் பாவனையில் ஈடுபடாதோர் என அனைத்து குழுக்களையும் இலக்கு வைத்து நெறிமுறையற்ற பல்வேறு செயற்பாடுகளை தொடர்ந்து புகையிலை நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. இதன் மூலம் பொது சுகாதாரம் நேரடியாக பாதிப்படைகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

இன்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் (ADIC) மற்றும் புகையிலை கட்டுப்பாட்டின் நல்லாட்சி நிர்வாகத்திற்கான உலக மையம் (GGTC) ஆகியன இணைந்து சர்வதேச மற்றும் இலங்கையின் புகையிலை தொழில்துறை தலையீடுகளின் குறியீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் இலங்கையில் புகையிலை தொழில்துறையின் தொடர்ச்சியான தலையீடுகள் எவ்வாறு பொது சுகாதாரம் மற்றும் புகையிலைக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை பாதிப்படையச் செய்கின்றது என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும்.

புகையிலை கட்டுப்பாட்டிற்கான கட்டமைப்பு உடன்படிக்கை (FCTC)யில் பங்கேற்றுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள், கட்டுரை 5.3 மற்றும் அதற்கான வழிகாட்டுதல்கள் மூலம், தங்களின் சுகாதாரக் கொள்கைகளை பாதுகாக்க வேண்டியது முக்கியமான பொறுப்பாகும். இந்தக் கட்டுரை, வணிக நலன்கள் மற்றும் பிற தனிப்பட்ட நலன்களின் தலையீடுகளிலிருந்து பொது சுகாதாரக் கொள்கைகளை பாதுகாப்பதற்காக உறுப்பு நாடுகளுக்கு அதிகாரமும் வழிகாட்டுதலும் வழங்குகின்றமைக் குறிப்பிடத்தக்கது.

கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கம் கணிக்கப்பட்டு வருகின்ற TII குறியீடு. அரசாங்கம் WHO, FCTC கொள்கையின் 5.3 பிரிவிற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை எவ்வாறு செயற்படுத்துகின்றன என்பதை சிவில் சமூகங்கள் இணைந்து இரண்டு வருடங்களிற்கு ஒரு முறை கண்காணிக்கும் குறியீடாகும். கிழக்கு மெடிடரேனியன் பிராந்தியம், அமெரிக்கா, ஐரோப்பியா, தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் மேற்கு பசுபிக் கண்டம் ஆகியவற்றை சார்ந்த 100 நாடுகளில் 2025ஆம் ஆண்டிற்கான TII குறியீடு ஆய்வு செய்யப்பட்டது. 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 2025ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கும் புகையிலை நிறுவனத்தின் தலையீடுகள் மற்றும் அவற்றிற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை மையப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

2025ஆம் ஆண்டிற்கான TII இன் ஆய்வின் படி இலங்கையின் நிலை 45ஆக குறிக்கப்பட்டுள்ளது. 40-49 எனும் புள்ளிகளில் பின்னடைவை எதிர்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இலங்கை 03 நிலைகளில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது.

இந்நிலைமையானது இலங்கையில் புகையிலை நிறுவனத்தின் தலையீடுகளின் அளவு அதிகரித்துள்ளது என்பதை சுட்டிக்காட்டுகின்றது. இலங்கையில் TII குறியீட்டு நிலை குறைவடைந்தமைக்கான காரணங்களாக அமையும் புகையிலை நிறுவனத்தின் தலையீடுகளின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- நலன் மோதல் (Conflict of Interest) : அரச அதிகாரிகள் மற்றும் புகையிலை நிறுவனத்திற்கிடையில் நிலவிய உறவுகள்
    - உயர் அரச அதிகாரிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் புகையிலை நிறுவனத்தில் அங்கம் வகிக்கின்றமை. குறிப்பாக இயக்குநர் குழுவில் அங்கம் வகிக்கின்றமை.
    - உயர் அரச அதிகாரிகள் புகையிலை நிறுவனத்தினல் தலைமைத்துவ வகிப்பாகங்களை வகிக்கின்றமை அல்லது வகித்தமை
- புகையிலை நிறுவனத்தின் சமூகப்பொறுப்பு (CSR) எனும் போர்வையில் நியாயமற்ற செயற்பாடுகளை பசுமை எனும் பெயரில் ஏமாற்றி தமது நிறுவனத்திற்கான விம்பத்தை ஏற்படுத்துகின்றமை.

இது போன்ற தொடர்ச்சியான சவால்களை முறியடிப்பதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு குறிப்பிடப்படுகின்றது. (எனினும் இவை கடந்த 2019ஆம் ஆண்டு தொடக்கம் தாமதமாக்கப்பட்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது)

- புகையிலைப் பொருட்கள் மீதான முறையான மற்றும் விஞ்ஞான ரீதியான வரிக்கொள்கையை அமுல்படுத்தி புகையிலை நிறுவனத்திடமிருந்து வரிகளை சேகரித்தல்
- தனி சிகரட் விற்பனையை தடை செய்தல்
- கல்வி நிறுவகங்கள் மற்றும் சமய ஸ்தலங்களிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு புகையிலைப் பொருட்களின் விற்பனையை தடை செய்தல்
- NATA சட்டத்தை மீறுமிடத்து அவை குற்றச்செயல் என்பதை உறுதி செய்தல்
- NATA சட்டங்கள் மீறப்படுமிடத்து அவற்றிற்கு விதிக்கப்படும் தண்டப்பணத்தின் அளவை அதிகரித்தல்
- புகையிலை பயிர்ச்செய்கையை விடுத்து மாற்றுப் பயிர்ச்செய்கைக்கு மாற்றமடைவற்கு புகையிலை பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவித்தல்
- வெற்றுப்பொதியிடல் முறைமையை அமுல்படுத்தல்

இலங்கை பல ஆண்டுகளாக புகையிலை கட்டுப்பாட்டில் வலுவான அரசியல் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறது. 2003 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பின் புகையிலை கட்டுப்பாட்டு சட்ட ஒப்பந்தமான (WHO FCTC) உடன்படிக்கையை தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் முதன்முதலாக அங்கீகரித்த நாடாக இலங்கை திகழ்கிறது. இதனைத் தொடர்ந்து பல முக்கியமான புகையிலை கட்டுப்பாட்டு கொள்கைகள் அமல்படுத்தப்பட்டன. மேலும், 2006 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட மதுசாரம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகார சபை சட்டம் (NATA Act) மூலம் பல முக்கியமான புகையிலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அவற்றில் 21 வயதுக்கு குறைவானவர்களுக்கு புகையிலை விற்பனை செய்யத் தடை, புகையிலைப் பொதிகளில் எச்சரிக்கை புகைப்படங்கள், சிகரட் வகைகளுக்கான வரி அதிகரிப்பு, ஊடக விளம்பரங்களுக்கான தடைகள் மற்றும் பொது இடங்களில் புகைபிடிப்பதற்கான தடை ஆகியவை உள்ளடங்குகினறன. WHO FCTC ஒப்பந்தத்தின் கட்டுரை 11இற்கு அமைவாக, சிகரட் பெட்டிகளில் 80வீதமான எச்சரிக்கை புகைப்படங்கள் 2015ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டன

எனினும், தொடர்ச்சியான தொழில்துறை தலையீடுகள் காரணமாக, ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ள கொள்கைகளை திறம்பட நடைமுறைப்படுத்துவதானது இன்னமும் ஒரு சவாலாகவே காணப்படுகின்றது. புகையிலை தொழில்துறை தலையீடுகளின் குறியீடு (TII Index) முடிவுகளானது, வலுவான பாதுகாப்பு நடைமுறைகள் மூலம் WHO FCTC ஒப்பந்தத்தின் கட்டுரை பிரிவு 5.3இன் முழுமையாக செயற்படுத்துதல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை சடுதியான தேவையென வலியுறுத்துகின்றன.

புகைப்பொருட்களின் விளைவுகளிலிருந்தும் புகையிலை தொழில்துறையின் தலையீடுகளிலிருந்தும் எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டியது மிகவும் முக்கியமான மற்றும் அவசியமான நடவடிக்கையாக கருதப்படுகின்றது.

வணிக நலன்களைவிட பொது சுகாதாரத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்காகவும், புகையிலை கட்டுப்பாட்டுக் கொள்கைகளை மேலும் தாமதமின்றி உருவாக்கி, அவற்றை திறம்பட அமுல்படுத்துவதற்கும், மேலும் கொள்கை உருவாக்கும் செயல்முறைகளின் போதும், பொது சுகாதாரத்தை பாதுகாக்கும் முயற்சிகளிலும் புகையிலைத் துறை தலையீடுகளின் அனைத்து வடிவங்களையும் அடையாளம் கண்டு, அவற்றை சவாலுக்குட்படுத்தி, தடுத்து, நிறுத்துவதில் எச்சரிக்கையுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அனைத்து நலன்விரும்பிகளையும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் அன்புடன் எதிர்ப்பார்க்கின்றது.

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்